DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.214/2025**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | விஜயபிரகாஷ் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | ஜெயபாலன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026

1, 2 எதிரிகள் ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது நாகப்பட்டினத்தில் குடியிருந்து தமிழ்நாடு அரசு போக்கு வரத்துக்கழக்கத்தில் நடத்துனராக இருந்து வருகிறேன். எதிரிகள் ஆனந்தக்குமார்., தினேஷ் ஆகியோர்களை தெரியயும். 13.10.2019 அன்று மன்னார்குடி – திருப்பூர் செல்வதற்காக tN 68 N 0956 என்ற பேருந்தில் நான் நடத்துனராகவும், ஓட்டுநர் ராமராஜ் என்பவரும் பணியில் இருந்தோம். காலை 11.00 மணிக்க மன்னார்குடியில் இருந்து டிரிப் எடுத்துக்கொண்டு குளித்தலை சுங்கேட் அருகே மாலை 03.15–03.20 மணியளவில் வந்து சேர்ந்தோம்.

2. அங்கு ஆனந்தக்குமார் என்பவர் பஸ்ஸின் படிக்கட்டில் நின்று கொண்டு போன் பேசிக்கொண்டு வந்தார். நீங்கள் கீழே விழுந்து விடுவீர்கள் என்று நான் சொன்னேன். அதற்கு அவர் ஏற மாட்டேன் என்று சொன்னார் அதற்கு நான் வழுக்கட்டாயமாக மேலே ஏறிவருமாறு சொன்னேன். அதற்கு அவர் எங்க ஊரில் வந்து என்னடா என்ன வந்து ஏறசொல்லறா என்று புண்டா மவனே என்று அசிங்கமாக திட்டி எனது சட்டையை பிடித்து என்னை வேலை செய்யவிடாமல் தடுத்தார். பின்பு அங்கிருந்த மற்ற பயணிகள் தடுத்தார்கள். எங்கள் ஊர் வந்தபிறகு நான் யார் என்று காட்டுகிறேன் பார் என்று சொன்னார்.

3. மாலை 03.45 மணியளவில் பேருந்து லாலாபேட்டை வந்த பஸ் நிறுத்தத்தில் பேருந்து நின்ற போது மற்றொரு எதிரி தினேஷ் என்பவரும், ஆனந்தகுமாரும் மாறி மாறி என்னை அடித்தார்கள். ஆனந்தக்குமார் கல்லை எடுத்து எனது மண்டையில் பின்புறத்தில் அடித்துவிட்டார். அதில் தலையில் வீக்கக்காயம் ஏற்பட்டது. இந்த ரூட்டில் எப்படி போகிறாய் என்று எதிரி ஆனந்தக்குமார் என்னை தேவடியா மவனே என்று அசிங்கமாக திட்டினார். இந்த ரூட்டில் இனிமேல் வந்தால் உன்னை கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்.

4. பின்பு மாயனூர் காவல் நிலையத்திற்கு, ஓட்டுநர், பயணிகள் அனைவரும் நானும் சென்று புகார் கொடுக்க சென்றபோது காவல் நிலையத்தில் இது எங்கள் லிமிட் இல்லை எனவே லாலாப்பேட்டை காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுக்கச்சொன்னார்கள். பயணிகளை மாற்று பேருந்தில் ஏறி அனுப்பி விட்டு நானும், ஓட்டுநரும் லாலாப்பேட்டை காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். பின்பு குளித்தலை கிளையில் வேலைசெய்யும் குமார் என்பவர் என்னை குளித்தலை GH க்கு அழைத்துச்சென்றார்.

5. அங்கு முதலதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு அங்கிருந்து மேல் சிகிச்சைக்கா திருச்சி GH க்கு Refer செய்தார்கள். நான் தஞ்சாவூர் GH க்கு பரிந்துரைக்குமாறு கேட்டேன். அதற்கு திருச்சிக்கு தான் அனுப்புவேன் என்று கூறினார்கள். எனவே திருச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேரவில்லை. தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைகாக சேர்ந்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) எதிரிகள் ஆனந்தக்குமார், தினேஷ் இருவரையும் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.17 11:11:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.